பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 09 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. மழை நீர் சேமிப்பு மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், 12 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

3. ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பிஜேபி வெளியிட்டுள்ளது.

4. மல்யுத்த வீரர்கள் பஜ்ரங் புனியா மற்றும் வினேஷ் போகத் இன்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர்.

5. உலக காதுகேளாதோருக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Shourya Saini** தங்கப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<>>>>>

மழை நீர் சேமிப்பு மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்

குஜராத் மாநிலம் சூரத்தில், மழைநீர் சேமிப்புத் தொடர்பான இயக்கத்தை காணொலி வாயிலாக தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மழை நீர் சேமிப்பு என்பது அரசின் கொள்கை மட்டுமல்ல, சமூக உறுதிபாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினர் நலத்தை கருத்தில் கொண்டு மழை நீர் சேமிப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத்திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டம் நமது நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த திட்டத்தின்மூலம், 12 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், ஐந்து லட்சம் வரை இலவச மருத்துவ சிகிச்சை பயனாளிகளுக்கு வழங்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நாடு முழுவதும் புதிதாக எயிம்ஸ் மருத்துவமனைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் தற்போது 22 எயிம்ஸ் மருத்துவமனைகள் செயல்பட்டு வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பிஜேபி வெளியிட்டுள்ளது.

ஜம்மு-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா இதனை வெளியிட்டார்.

மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும், இந்து கோவில்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பிக்கப்படும், இளையோருக்கு ஐந்து லட்சம் வேலைவாய்ப்புகள்

உருவாக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 26 தொகுதிகளில் வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும். அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

90 உறுப்பினர்களை கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கான தேர்தல் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

வக்ஃபு வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

தெலங்கானா வக்ஃபு வாரியம், **Zakat** அறக்கட்டளை மற்றும் அகழாய்வுத்துறை பிரதிநிதிகள் இக்குழுவிடம் தங்களது பரிந்துரைகளை சமர்ப்பித்தனர்.

மக்களவை உறுப்பினர் திரு ஜெகதாம்பிகா பால் தலைமையிலான 31 பேர் கொண்ட இந்தக்குழுவில், மக்களவையிலிருந்து 21 பேரும், மாநிலங்களவையிலிருந்து 10 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<>>>>>

மல்யுத்த வீரர்கள் பஜ்ரங் புனியா மற்றும் வினேஷ் போகத் இன்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர்.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் மற்றும் **Deepak Bawaria** முன்னிலையில் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மகளிருக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி திகழ்வதாகவும், இதன் அடிப்படையில் தாம் அக்கட்சியில் இணைந்ததாக வினேஷ் போகத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிஜு ஜனதாதள கட்சியின் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் திரு சுஜித் குமார், இன்று பிஜேபி-யில் இணைந்தார்.

மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் முன்னிலையில் அவர் அக்கட்சியில் இணைந்தார்.

முன்னதாக, திரு சுஜித் குமார், மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

அவரது ராஜினாமாவை மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் ஏற்றுக்கொண்டார்.

இதற்கிடையே, பிஜு ஜனதாதள் கட்சியிலிருந்து திரு சுஜித் குமார் நீக்கப்படுவதாக அக்கட்சியின் தலைவர் திரு நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தெலங்கானாவில் மழை வெள்ள பாதிப்பு குறித்து மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டியுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு **Bandi Sanjay Kumar** –யுடன் இணைந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள **Khammam** மாவட்டத்தில் வான்வழியாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் ஆய்வு மேற்கொணடார்.

மழை வெள்ள பாதிப்பை சீர்செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

இதற்கிடையே, ஆந்திராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு வான்வழியாக இன்று ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின்போது மழை பாதிப்பு குறித்து அதிகாரிகளிடம் அவர் விரிவாக கேட்டறிந்ததாக எமது யெ்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளில் கடற்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடற்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர்கள் மூலம் உணவு பொட்டலங்கள் மற்றும் மருந்து பொருட்களும், தண்ணீர் பாட்டீல்களும் வெள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

வெள்ளத்தில் சிக்கிய 150 பேர் ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை கூறியுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா – மாலத்தீவு இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத்துறை செயலர் திரு **Giridhar Aramana** தலைமையிலான குழு இதில் பங்கேற்றது.

மாலத்தீவு சார்பில் பாதுகாப்புப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் **Ibrahim Hilmy** தலைமையிலான குழுவும் இதில் கலந்துகொண்டது.

பாதுகாப்பு ஒத்துழைப்பை பரஸ்பரம் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திகிகுறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<>>>>>**

நாட்டிலேயே முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கு வளாக தேர்வு நடைபெற்றது.

இறுதியாண்டு மாணவர்களுக்கான இந்த வளாக தேர்வில் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது வரவேற்பை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் டைட் - விஜயகுமார் - 39 செகண்ட்ஸ்)*

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் அச்சமின்றி நேர்முகத் தேர்வினை எதிர்கொள்ள முடிந்ததாக இதில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்தனர்.

*(வாய்ஸ் பைட் - மாணவர்கள் - 32 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக காதுகேளாதோருக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Shourya Saini** தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Hanover**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பத்து மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 5 தங்கம், 7 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-------------------

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பிரவீன் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் **Dilip Gavit** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் சிம்ரன் சர்மா அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

படகு துடுப்பு போட்டியின் 200 மீட்டர் மகளிர் ஒற்றையர் பிரிவில் **Prachi Yadav-** வும், **Pooja Ojha** –வும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Yash Kumar-**ம் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 14–ஆவது இடத்தில் உள்ளது.

--------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஸ்பெயினின் **Pontevedra** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் **Jyoti Berwal** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் **Komal**-லும், 68 கிலோ எடைப்பிரிவில் **Srishti** –யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-5, 11-7, 11-7 என்ற செட் கணக்கில், பாகிஸ்தானின் **Nasir Iqbal** –ஐ வென்றார்.

---------------------

**Diamond** லீக் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்க இந்தியாவின் நீரஜ் சோப்ரா தகுதி பெற்றுள்ளார்.

இப்போட்டி, **Brussels** –ல் வரும் 13-ஆம் தேதி தொடங்குகிறது.

-------------

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<END>>>>>**